DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII - CODE OF ORIGINAL PROCEDURE)

IN THE COURT OF ASSISTANT SESSIONS , DHARAPURAM

**Sessions Case No.310/2023**

**(Preliminary Register.No.17/2023)**

Deposition of Witness **அ.சா.1 ன் வாக்குமூலம்**

Prosecution Witness No.1

| NAME: | ரேவதி | HUSBAND NAME: | பழனிச்சாமி |
|---|---|---|---|
| VILLAGE: | மல்லாம்பாளையம் | TALUK: | தாராபுரம் |
| CASTE: | --- | CALLING: | விவசாயம் |
| RELIGION: | இந்து | AGE: | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 24.08.2026

1,3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி காணொலி வாயிலாக சிறைச்சாலையில இருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.

**<u>முதல் விசாரணை</u>** :-

நான் தற்போது மல்லம்பாளையம், கொத்துக்காரன் தோட்டத்தில் குடியிருந்து வருகிறேன். சம்பவம் நடந்த தேதியான 28.02.2023ம் தேதி நான் இரவு 11 மணிக்கு எனது வீட்டில் ஹாலில் அமர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். அப்போது ஒரு நபர் முகத்தை மறைத்துக்கொண்டு வீட்டினுள் வந்து கத்தியை காட்டி எனது செயினை பிடித்து இழுத்தார். அந்த நபர் ஆஜர் 1ம் எதிரி ஆவார். அவர் முகமூடி மாதிரி அணிந்து அவரது முகத்தை மறைத்துக்கொண்டார். 1ம் எதிரி எனது தாலிசெயினை பறிக்க முயன்ற போது நான் சத்தம் போட்டதில் எனது தாயார் வந்து தடுத்த போது எனது தாயாரை 1ம் எதிரி கத்தியால் குத்திவிட்டார். என்னிடம் காட்டப்படும் தாலிசெயின் குறித்த புகைப்படம் மற்றும் அதன் சிடி(CD) அசல் சான்று பொருள் (சா.பொ) 1 ஆகும். பின்பு நான் சத்தம் போட்டேன், அப்போது அருகில் இருந்த கார்த்திக் மற்றும் துரைசாமி ஆகியோர் வந்தார்கள் அந்த 1ம் எதிரியை தேடிப்பார்த்தார்கள் அவர் அங்கிருந்து ஓடிவிட்டார். பின்பு காயம் அடைந்த எனது தாயாரை கரூர் அமராவதி தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். பின்பு அடுத்த நாள் 01.03.2023ம் தேதி காலை மூலனூர் காவல்நிலையம் சென்று மேற்படி சம்பவம் சம்மந்தமாக புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் அந்த புகார் நான் கொடுத்தது தான். நான் கைப்பட எழுதிய எழுத்துமூலமான புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். பின்பு போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் நான் நடந்த விவரங்களை போலிசாரிடம் தெரிவித்தேன். மேற்படி விசாரணையானது எனது வீட்டில் நடந்தது. மேற்படி செயினின் மதிப்பு ரூ.95,000/- ஆகும். அந்த செயின் 6 ½ பவுன் இருக்கும்.

<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் விவசாயம் செய்து வருகிறேன். எனதுவீடு தோட்டத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு முன்புறம் கேட்டோ, காம்பவுண்ட் சுவரோ எதுவும் இல்லை. எப்போதுமோ எனது தாயார் வெளியில் தூங்கும் போது வெளியில் உள்ள லைட்டை அணைத்துவிட்டு தான் தூங்குவார் என்றால் சரிதான். 1ம் எதிரி முகத்தை மறைத்ததாக சொல்லியுள்ளேன் அவர் எதனால் மறைத்தார் என்ற விவரத்தை நான் எனது புகார் மனுவிலோ, போலிசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி வந்த போது நான் சுதாரித்துக்கொண்டு நான் எனது செயினை இழுத்து பிடித்தேன் எதிரியும் எனது செயினை இழுத்து பிடித்தார் அப்போது அந்த செயின் அந்துபோவதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி எதிரி தாலிக்கொடியை பிடித்து இழுத்த போது அந்த செயினில் உள்ள தாலிக்கொடி அறுந்துபோய் விட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சா.பொ.1ல் உள்ள புகைப்படத்தில் என்னிடம் இருந்து பறிக்கப்பட்ட செயின் அறுந்துபோய்விட்டதற்கான தடயங்கள் இல்லை என்றால் சரியல்ல. 2 வளையங்களில் 1 வளையம் அறுந்துவிட்டது, மாங்கல்யம் விழுந்துவிட்டது. மேற்படி விவரத்தை நான் எனது புகார் மனுவிலோ, போலிசார் விசாரணையிலோ சொல்லியுள்ளீர்களா என்றால் அதில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி எனது செயினை இழுத்தபோது நான் சத்தம் போட்டவுடனே எனது தாயார் வீட்டினுள் வந்துவிட்டார் என்றால் சரிதான். 1ம்எதிரி எனது தாயாரை இடது கை மணிக்கட்டில் குத்திவிட்டதாக சொல்லியுள்ளேன் ஆனால் எந்த இடத்தில் என்று குறிப்பிட்டு எனது புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி ஓடியதற்கு பின்னிட்டு தான் கார்த்தி மற்றும் துரைசாமி ஆகியோர்கள் வந்தார்கள் என்றால் சரிதான். துரைசாமி வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் குறைவான தூரம் சுமார் 2மீ தான் இருக்கும். எனது வீட்டிற்கு ஒட்டியே கிழக்கு திசையில் பெரியாச்சிக்கு சொந்தமான தோட்டம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பெரியாச்சிக்கு சொந்தமான தோட்டத்திற்கு தென்புறமாகத்தான் துரைசாமி தோட்டமும் வீடும் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் கார்த்திகேயன் வீட்டிற்கும் சுமார் 20முதல்25 அடி தூரம் இருக்கும். எனது வீட்டிற்கும் வடக்காக தெய்வாணை என்பவரது தோட்டமும் வீடும் உள்ளது என்றால் சரிதான்.

2) தெய்வாணை வீட்டிற்கு அடுத்து வடக்கே தான் கார்த்திக் என்பவரின் வீடு உள்ளது என்றால் சரிதான். தெய்வாணை தோட்டம் எனது வீட்டிற்கு எதிர்புறத்தில் தான் உள்ளது. 1ம் எதிரி பறித்தாக சொல்லப்படும் தாலிக்கொடி என்ன மாடல் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடந்த 5 நிமிடத்திலேயே கார்த்திக் மற்றும் துரைசாமி ஆகியோர்கள் வந்துவிட்டார்கள். 1ம் எதிரி எந்த திசையில் ஓடினார் என்றும் 1ம் எதிரினை எந்தெந்த இடத்தில் தேடினோம் என்று எனது முதல் விசாரணையிலும், புகார் மனுவிலும், சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி எனது தாயாரை குத்திய கத்தி என்ன விதமான கத்தி என்று எனக்கு தெரியாது கத்தி என்று மட்டும் தான் தெரியும். எனது தாயாருக்கு ஏற்பட்ட காயமானது சாதாரண காயம் என்றால் இல்லை எனது தாயாருக்கு கொடுங்காயம் தான் ஏற்பட்டது இரத்தம் நிறைய வெளியேறியது. சம்பவம் நடந்து ஒரு அரைமணி நேரத்திற்குள் எனது தாயாரை மருத்துவமனைக்கு கொண்டுசென்றுவிட்டோம். எனது வீட்டிற்கும் தாராபுரத்திற்கும் சுமார் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 30 கி.மீ. தூரம் இருக்கும். எனது வீட்டிற்கும் கரூருக்கும் சுமார் 35 கி.மீ. தூரம் இருக்கும். நான் எனது தாயாரை சிகிச்சைக்காக தாராபுத்திற்கு கொண்டுவராமல் ஏன் கரூருக்கு

கொண்டு சென்றீர்கள் என்றால் நாங்கள் எப்போதுமே அமராவதி மருத்துவமனையில் தான் சிகிச்சை பார்ப்போம். அதனால் அங்கு கொண்டுசென்றோம். அங்குள்ள மருத்துவர்கள் அரசு மருத்துவமனைக்கு சென்று முதல் உதவி சிகிச்சை செய்து வரவேண்டும் என்று மருத்துவர் சொன்னாரா என்றால் சொல்லவில்லை. எனது தாயாருக்கு சுமார் 73 வயது இருக்கும். 1ம் எதிரியும் நானும் எனது செயினை மாற்றி மாற்றி இழுத்த போது எனது கழுத்தில் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி தப்பித்து ஓடும் போது எந்த ஒரு தடயங்கள் எதையும் எனது வீட்டில் விட்டுவிட்டு சென்றுள்ளாரா என்றால் விட்டுசென்றுள்ளார் அவர் காலில் அணியும் சாக்சை கையில் போட்டிருந்து வீட்டிற்கு தென்புறமாக போட்டு விட்டு சென்றிருந்தார். மேற்படி தடயங்களை எல்லாம் சம்பவம் நடந்தவுடனே பார்த்து எடுத்துவிட்டோம் என்றால் சரிதான். மேற்படி விவரத்தையும் எனது எழுத்து மூலமான புகார் மனுவிலும், போலிசார் விசாரணையிலும், நீதிமன்றத்தின் முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த மறுநாள் நான் மருத்துவமனையிலிருந்து காலை 7–8 மணிக்குள் நானும் எனது தாயாரும் வீட்டிற்கு கிழம்பிவிட்டோம். நாங்கள் வீட்டிற்கு 8.30 மணிக்கு வந்துவிட்டோம். எனது வீட்டிற்கும் மூலனூர் காவல் நிலையத்திற்கும் சுமார் 7 கி.மீ. தூரம் இருக்கும். நான் காவல் நிலையத்திற்கு 9 மணிக்கு வந்துவிட்டேன்.

3) எதிரிகள் எனது வீட்டிற்கு வரவும் இல்லை என்றும், எனது தாலிக்கொடியை பறிக்கவும் இல்லை என்றும், எனது தாயாரை கத்தியால் குத்தவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையாகவே 1ம்எதிரி எனது நகையை பறித்திருந்தால் நகையின் மாடலை எனது புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றும், அவ்வாறு சம்பவம் எதுவும் நடைபெறாததால் தான் எனது செயின் பற்றிய விவரத்தை குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரியல்ல. தாலிக்கொடியும் ஒரே மாதிரி தான் இருக்கும். நான் புகார் கொடுத்த அன்றைய தினமே போலிசார் சம்பவ இடம் வந்து விசாரித்தார்கள். போலிசார் விசாரித்தபோது சுமார் 10 நபர்கள் இருந்திருப்பார்கள். சம்பவம் பற்றி போலிசார் விசாரித்த போது யார் யார் இருந்தார்கள் என்ற விவரத்தை நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1ம்எதிரி விட்டுசென்ற தடயத்தை நானே தான் எடுத்து போலிசாரிடம் ஒப்படைத்தேன். மேற்படி தடயத்தை போலிசாரிடம் ஒப்படைத்தபோது போலிசார் கையெழுத்து பெற்றார்களா என்றால் கையெழுத்து வாங்கினார்கள். போலிசார் தடயத்தை கைப்பற்றிய சமயத்தில் போலிசார் யார் யாரிடம் கையெழுத்து பெற்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றும், அதனால் 1ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் உண்மை சம்பவத்தை மறைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

(ஒப்பம்.கு.சக்திவேல்)
சார்பு நீதிபதி
தாராபுரம்.